## அலகு 2 - பகுதி – அ

**1.ஒரு மதிப்பெண்வினா**

**1. கதிரவனின் மற்றொரு பெயர்?**

அ) புதன்
ஆ) ஞாயிறு
இ) சந்திரன்
ஈ)செவ்வாய்

**விடை : ஆ ) ஞாயிறு**

**2. வெண்குடை என்ற சொல்லை பிரித்தெழுதுக........**

அ) வெண்+குடை
ஆ) வெண்மை+குடை
இ) வெம்- குடை
ஈ) வெம்மை குடை

**விடை : ஆ ) வெண்மை + குடை**

**3. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் .......**

அ) ஏரி
ஆ) கேணி
இ) குளம்
ஈ) ஆறு

**விடை : ஆ ) கேணி**

**4. நில + ஒளி என்பதனைச் சேர்த்து எழுத கிடைக்கும் சொல்.........**

அ) நிலா ஒளி
ஆ) நில ஒளி
இ) நிலா வொளி
ஈ) நிலவு ஒளி

**விடை : இ ) நிலாவொளி**

**5. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக**

அ) வேதி+யுரங்கள்
ஆ) வேதி + உரங்கள்
இ)வேதி + உரங்கள்
ஈ) வேதியு+ரங்கள்

**விடை : ஆ ) வேதி + உரங்கள்**

**6. நன் மாடங்கள் என்னும் சொல்லை பிரித்தெழுதுக**

அ) நன் + மாடங்கள்
ஆ) நற் + மாடங்கள்

இ) நன்மை + மாடங்கள்
ஈ) நல் + மாடங்கள்
**விடை : இ ) நன்மை + மாடங்கள்**

**7. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி...........**
அ) துருவப் பகுதி
ஆ) இமயமலை
இ) இந்தியா
ஈ) தமிழ்நாடு
**விடை : அ ) துருவப் பகுதி**

**8. வழி தடம் என்பதனைச் சேர்த்து எழுதுக**
அ) வழிதடம்
ஆ) வழித்தடம்
இ) வழிதிடம்
ஈ) வழித்திடம்
**விடை : ஆ ) வழித்தடம்**

**9. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது...........**

அ) ஊக்கமின்மை
ஆ) அறிவுடைய மக்கள்
இ)வன்சொல்
ஈ) சிறிய செயல்
**விடை : ஆ ) அறிவுடைய மக்கள்**

**10. ஒருவருக்குச் சிறந்த அணி...........**

அ) மாலை
ஆ) காதணி
இ) இன்சொல்
ஈ)வன் சொல்
**விடை : இ ) இன்சொல்**

## பகுதி-ஆ

**IL. சிறுவினா**

**1. இயற்கை போற்றத்தக்கது ஏன்?**

- வெண்ணிலவு தன் ஒளியால் உலகுக்கு இன்பம் அளிக்கிறது.
- கதிரவன் பொன் போன்ற சிகரங்களையுடைய இமயமலையை வலப்புறமாகச் சுற்றி வருகிறது.

- மழை வானிலிருந்து பொழிந்து மக்களைக் காக்கிறது.
- எனவே , இயற்கைப் போற்றத்தக்கது.

**2. காணி நிலம் பாடலின் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக?**

**காணி – காணி = கா**
**பத்துப் – பக்கத்திலே = ப**
**முத்துச் சுடர் – முன்பு = மு**

**3. பறவைகள் எக்காரணங்களுக்கு இடம் பெயர்கின்றன?**

உணவு , இருப்பிடம் , தட்பவெப்பநிலை மாற்றம் , இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன.

**4. சாண்டியாகோ குறித்து உங்கள் கருத்து யாது?**

* சாண்டியாகோ வயது முதிர்ந்த மீனவர் .
* கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல் திரும்ப மாட்டார்.
* மனோலின் எனும் சிறுவன் அவருடன் மீன் பிடிக்க வந்தான்.
* சாண்டியாகோ விடாமுயற்சியும் , தன்னம்பிக்கை உடையவராகவும் திகழ்கிறார்.

**5. எழுத்துக்களுக்குத் தொடக்கமாக அமைவது?**

முதலெழுத்துகள்

## பகுதி – இ

**III. பெருவினா**

**1 பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றி சிந்தித்து எழுதுக?**

* ஆல் , அரசு போன்ற மரங்களையும் அவரை , புடலை பொன்ற கொடிகளையும் வளர்க்க வேண்டும்.
* நமது மண்ணுக்கேற்ற பிறவகை உள்ளூர்த் தாவரங்களையும் வளர்க்க வேண்டும்.
* தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் செயற்கை உரங்கள் , பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## பகுதி-ஈ

**IV.செயல்பாடு**

**1 சாண்டியாகோவைப் போன்று உனக்கோ அல்லது உன்னைச் சார்ந்தவர்களுக்கோசவாலாக இருந்த ஒருநிகழ்வை அரைப்பக்க அளவில் எழுதுக.**